2005 செப்டம்பர் 23]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, ஆய்வு செய்து முடிவெடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 40, திரு. து. நெப்போலியன், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்.

40—

விளையாட்டுத் திடல்

***66629—திரு. து. நெப்போலியன்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம், இராஜமங்கலம் பகுதியில் விளையாட்டுத் திடல் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கம், இராஜமங்கலம் பகுதியில் விளையாட்டுத் திடல் ஏற்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. து. நெப்போலியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கம் பகுதியில், இராஜமங்கலத்தில், வடக்கு ஜெகன்னாத நகர், மூன்றாவது தெருவில், சுமார் 3 கிரவுண்டு மதிப்பிற்குண்டான இடம், சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடம். அது, சிறுவர் விளையாட்டுத் திடல் என்று ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்குப் பெயர்ப் பலகை மட்டும் வைக்கப்பட்டுள்ளது. அதை, உடனடியாக விளையாட்டுத் திடலாக அரசு அமைத்துத் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிக்கு உட்பட்ட இடம் என்பதனால், மாநகராட்சி, விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு, அந்த இடத்தைத் தந்தால், விளையாட்டு மைதானம் அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. து. நெப்போலியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி வில்லிவாக்கம் தொகுதி, ஆசியாவிலேயே பெரிய தொகுதி. என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட இராஜமங்கலத்தில், சுமார் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கும் சிறுவர்கள், இளைஞர்கள் விளையாடுவதற்கு ஒரு விளையாட்டுத் திடலோ, விளையாட்டு மைதானமோ, முதியவர்கள் நடை பயிற்சி செய்வதற்குண்டான இடமோ ஏதுமில்லை. இந்தச் சிறுவர் விளையாட்டுத் திடல் என்ற ஒரு பெயர்ப் பலகை மட்டும் வைக்கப்பட்டு, அதில் எந்தவிதமான வசதியும் செய்து தரப்படாமல் இருக்கிறது. அதற்கு உடனடியாக அரசு, மாநகராட்சிக்கு ஆணை வழங்க வேண்டும், விளையாட்டுத் திடலாக அமைத்துக் கொடுப்பதற்கு. அதுமட்டுமல்லாமல், இவ்வளவு மக்கள் வாழ்கின்ற பகுதியிலே குறைந்தது 10 விளையாட்டுத் திடல்களாவது இருக்க வேண்டும். அதற்கேற்றாற்போல் அந்தப் பகுதியிலே பொதுக் கழிப்பிடங்கள் 2, 2 கிரவுண்டில் பழுதடைந்து, பயன்படுத்தப்படாமல் உபயோகப்படாமல் இருக்கிறது. அதை அந்தப் பகுதி மக்கள், உடனடியாக இடித்துவிட்டு விளையாட்டுத் திடலாக அமைத்துக் கொடுக்கும்படி கோரிக்கை வைத்துள்ளார்கள். அரசு உடனடியாகப் பார்வையிட்டு அதைச் செய்து தருமா? அதேபோல இராஜமங்கலத்தில் கால்நடை அரசு மருத்துவமனை ஒன்று உள்ளது. அதிலும் நிறைய காலி இடங்கள் உள்ளன. அதிலும் ஒரு விளையாட்டுத் திடல் அமைத்துத் தருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–50

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு திறந்தவெளி விளையாட்டு அரங்கம், ஒரு வெளி விளையாட்டு அரங்கம், ஒரு நீச்சல் குளம் மற்றும் ஓர் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வட்டத் தலைநகரத்திலும் ஒரு சிறு விளையாட்டு அரங்கமும் உருவாக்கப்பட வேண்டும் என்பது மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் கொள்கையாகும். மாண்புமிகு உறுப்பினர், வில்லிவாக்கம் தொகுதியில் வட்டத் தலைநகரத்தில் 7 ஏக்கர் நிலம் அரசுக்குத் தந்தால், ஒரு சிறு விளையாட்டு அரங்கம் சுமார் 40 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும். மற்ற வினாக்களுக்கு தனி வினா எழுப்பினால் பதில் தரப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.